கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

இலாப நோக்கற்ற அமைப்பு
Title 26 of the U.S. Code, § 501 (c)(3)

# சி ஆர் தமிழ் பள்ளி

வழங்கும்

# ஒளிச்சுடர்

பதிப்பு
ஆகஸ்ட் 2024 - ஜூன் 2025

முகவரி: FaithLife Church, 8300 C Avenue, Marion, IA 52302
https://crtamilpalli.org

# <u>உள்ளடக்கம்</u>


❖ தமிழும் அயலகமும்
❖ பள்ளி வரலாறு
❖ நிர்வாகக் குழு
❖ ஆசிரியர்கள் குழு
❖ கல்வியாண்டில் மாணவர்களின் சாதனைகள்
❖ ஆசிரியர் விருது

# தமிழும் அயலகமும்

*தேமதுரத் தமிழோசைஉலகமெல்லாம்*

*பரவும் வகைசெய்தல் வேண்டும்*

*- **பாவேந்தர் பாரதிதாசன்***

வெளிநாடுகளில் தமிழக மக்கள் வேலை நிமித்தமாக புலம் பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாக அமெரிக்காவின் பல மாநிலங்களில் தமிழக மக்கள் புலம் பெயர்ந்து வசிக்கிறார்கள். 1995 ஆம் ஆண்டிற்கு முன் புலம் பெயர்ந்த தமிழகக் குடும்பங்களின் குழந்தைகளுக்கு தமிழ் கல்வி வீட்டிலேயேகற்றுக் கொடுக்கப்பட்டது. அந்த சமயம் முறையாக கட்டமைக்கப்பட்ட தமிழ்ப் பள்ளிகளோ, தமிழ் மொழி பாடத்திட்டங்களோஇல்லாமல் இருந்தது. வெளிநாட்டுப் பள்ளிகளில் முதன்மைப் பாடமாக ஆங்கிலம் இருந்ததால், தமிழ் குழந்தைகள், தங்கள் வீட்டிலேயேதமிழ் பேசுவதைவிடுத்து, ஆங்கிலம் பேச ஆரம்பித்தனர். தமிழ் மொழியைகற்பதற்கான வாய்ப்பானது மெல்ல மெல்ல குறையத் தொடங்கியது.

இதனை அறிந்த அயலகத்தில் வாழும் தமிழ் ஆர்வலர்கள் தங்கள் தாய்மொழி வேரினைதக்க வைத்துக் கொள்ள விரும்பி தமிழ் சங்கங்களையும், தமிழ் பள்ளிகளையும் தொடங்கினார்கள். அதன் பின்னர், கோவில்கள், சமூக மையங்கள், தனியார் வீட்டு நிலவறைகள் போன்றவற்றில் தன்னார்வலர்களால் தமிழ் மொழி வகுப்புகள் நடத்தப்பட்டன. அப்போது முறைப்படுத்தப்பட்ட பாடத்திட்டங்களோ, புத்தகங்களோ இல்லை. இந்த சிக்கல்களை எல்லாம் சரி செய்ய பல்வேறு முயற்சிகள், பல்வேறு தமிழ்ப் பள்ளிகளின் தன்னார்வலர்களால் மேற்கொள்ளப்பட்டன.

அமெரிக்கக் கல்விச் சூழலில் கல்வி பயிலும் தமிழகக் குழந்தைகளின் தேவைகளுக்கேற்ப பாடத்திட்டங்களும், பாடநூல்களும், பயிற்று கருவிகள் (Teaching Equipment) போன்றவை உருவாக்கப்பட்டன. குழந்தைகளுக்குத் தமிழ் கற்றுத்தர தன்னார்வலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. தற்போது தரப்படுத்தப்பட்ட பாடத்திட்டங்களை கட்டமைத்து பல்வேறு தமிழ்ப் பள்ளிகளைத் தங்களுடன் இணைத்துக் கொண்டு (Affiliation) தமிழ் மொழிக் கல்வியினை வழங்கும் அமைப்புகள் இரண்டு

- **அமெரிக்க தமிழ் அகாடமி** (American Tamil Academy (ATA), முகவரி: 8611 கான்கார்ட் மில்ஸ் பொலிவர்டு. #440, கான்கார்ட் NC 28027-5400. தோற்றம்: 2010. உறுப்புப் பள்ளிகள்: 100 க்கும் மேல்.[4]

- **உலகத் தமிழ்க் கல்விக் கழகம்** *(International Tamil Academy (ITA), (பழைய பெயர்: கலிபோர்னியா தமிழ் அகாடமி California Tamil Academy (CTA), முகவரி: 14435 சி பிக் பேசின் வழி #179 சரடோகா, CA 95070-6091. கிளைகள்: 8, உறுப்புப் பள்ளிகள் 81[5]*

*இவை தவிர சிங்கப்பூர் கல்வி அமைச்சின் தமிழ்ப் பாடத் திட்ட வரைவுப் பிரிவு உருவாக்கிய தமிழ்மொழி பாடத்திட்டம், [6] தமிழ்நாட்டின் சமச்சீர் கல்வி பாடத்திட்டம், தமிழ் இணையக் கல்விக் கழகம் (TVA) பாடத்திட்டம்[7], மினிசோட்டா தமிழ்ப் பள்ளி பாடத்திட்டம்[8] மற்றும் பொள்ளாச்சி நசனின் 32 அட்டையுடன் தமிழ் பயிற்றுவிக்கும் முறை, [9][10] பிற உள்நாட்டுப் பாடத்திட்டங்களின் பல்வேறு பாடத்திட்டங்களைசில தமிழ்ப் பள்ளிகள் பயன்படுத்துகின்றன.*

*தமிழ் மொழிக் கல்வி கற்கும் குழந்தைகளுக்குச் சாதகமாக சில நல்ல மாற்றங்கள் தொடங்கியுள்ளதை இங்கு குறிப்பிடலாம். இரண்டாம் மொழி படிப்பவர்களுக்கு வழங்கப்படும் புள்ளிகளில் (கிரெடிட்) ஒரு பகுதியைதமிழ் படிப்பவர்களுக்கு வழங்க சில மாநிலங்களும் அவற்றின் கல்வி மாவட்டங்களும் முன்வந்துள்ளன. உலகத் தமிழ்க் கல்விக் கழகத்தின் உயர்நிலைப் பள்ளி புள்ளித் திட்டம் (High School Credit Program - HSCP) என்பது அமெரிக்கப் பள்ளிகளின் இரண்டாம் மொழிக் கல்வித் தேவைகளைநிறைவேற்றுவதற்காக தமிழ் மொழி வகுப்புகளைநடத்துவதாகும். ஸ்பானிஷ் மற்றும் பிரெஞ்ச் மொழிகளைப் போன்றேநான்கு நிலைகள் கொண்ட தமிழ் வகுப்பினைஇக்கழகம் நடத்தி வருகிறது.*

*வெளிநாட்டு மொழியைகற்பிப்பதற்கான அமெரிக்க கவுன்சில் நிறுவனம் (American Council for Teaching Foreign Language - ACTFL) மொழித்திறனைச் சோதிப்பதற்கான மதிப்பீட்டுக் கோட்பாடுகளை வகுத்துள்ளது. இதன்படி தகுதிமிக்க ஆசியர்களால் மாணவர்களின் மொழி அறிவினைச் சோதிக்கவும், சோதனையில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு இருமொழி முத்திரை (Seal Of Bi-literacy) என்னும் அங்கீகாரத்தை வழங்கும் திட்டத்திற்கு இருமொழி முத்திரை வழங்கும் திட்டம் என்று பெயர். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு, அவர்களது மாநிலக் கல்வித்துறை வழங்கும் முத்திரை இருமொழி முத்திரை ஆகும். மேல்நிலைப் பள்ளியின் இறுதி வகுப்பில் ஆங்கில மொழி தவிர இரு மொழிக்கான தேர்வில் தேர்ச்சியடையும் மாணவர்களுக்கான 'இருமொழிக் கல்வி முத்திரையினை' வழங்க கலிபோர்னியா மாநிலம் முன்வந்துள்ளது. இம்மாநிலத்தின் இரு மொழிகளுக்கான விருப்பத் தேர்வுப் பட்டியலில் தமிழ் இடம் பெற்றுள்ளதை குறிப்பிடலாம்.*

# சி ஆர் தமிழ் பள்ளி

*ஓர் இலாப நோக்கற்ற அமைப்பு Title 26 of the U.S. Code, § 501 (c)(3)*

## தொடக்கம்

தமிழ் மொழிக் கல்வியை வழங்குவதை உன்னத நோக்கமாகக் கொண்டு அயோவா மாநிலத்தின், சிடார் ராபிட்ஸ் நகரில் 2017 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகின்றது. நம் சி. ஆர். தமிழ்ப் பள்ளி அமெரிக்கத் தமிழ் அகாடமி (ATA) பாடத்திட்டத்தை பின்பற்றி வருகிறது. "ஊர் கூடினால் தான் தேர் நகரும்" என்பதற்கிணங்க தமிழ் கற்பிக்கும் ஆர்வம் கொண்ட சிறந்த தன்னார்வலர்களால் சி. ஆர். தமிழ்ப் பள்ளி சிறப்புடன் இயங்கி வருகிறது.

தமிழ் மொழியைக் கற்க பல மாணவ மாணவியர் ஆர்வமுடன் நம் தமிழ்ப் பள்ளிக்கு வருகின்றனர். இந்த வருடம் (2024-2025), நம் சி.ஆர்.தமிழ்ப் பள்ளியில் முன்மழலையில் இருந்து நிலை-7 வரை கிட்டத்தட்ட நூறு மாணவ மாணவியர்களுக்கு மேலாக தமிழ் பாடம் கற்றுக் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு வருடமும், மூன்று பருவத் தேர்வுகள் மாணவ மாணவியர்களுக்கு நடத்தப்பட்ட பின் அவர்கள் அடுத்த நிலைக்கு தேர்ச்சி பெற்று செல்கின்றனர். ஒவ்வொரு வருடமும் தமிழ்ப் பள்ளி ஆண்டு விழாவையொட்டி மாணவ மாணவியர்களுக்கு பல்வேறு தமிழ் சார்ந்த போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன.

## நிகழ்வுகள்

தமிழ்ப் பள்ளி ஆண்டு விழாவன்று தமிழ் பாரம்பரியத்தை ஒட்டிய இலக்கண இலக்கியம் பேச்சுப்போட்டி, ஓவியப்போட்டி, கதை மற்றும் கவிதை சொல்லுதல் போட்டி மற்றும் கலை நிகழ்ச்சிகள் (ஆடல், பாடல், நாடகம்) மாணவ மாணவியர்களால் மிகச் சிறப்பாக அரங்கேற்றப்படுகிறது.

## நோக்கம்

**செந்தமிழை அறிவோம், செந்தமிழை வளர்ப்போம், தமிழராய் இணைவோம்!!!**

தமிழ் மொழிக் கல்வியை வழங்குவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு CRTP உறுப்பினர்களால் சி ஆர் தமிழ் பள்ளி தொடங்கப்பட்டது. சி ஆர் தமிழ் பள்ளி பொதுக்குழு அதன் மாணவர்களுக்கு உலகில் பரவலாகப் பேசப்படும் பாரம்பரிய மொழியை, தமிழை வழங்குவதை கல்வி நோக்கமாகக் கொண்டிருக்கும். இந்த அமைப்பு, திட்டத்தைப் பற்றிய தகவல்களை சமூகத்திற்கு பரப்புதல்; பெற்றோருக்கும் திட்டத்திற்கும் இடையே ஒரு தொடர்பு பாலத்தை வழங்குதல்;

மாணவர் சேர்க்கையில் பங்கேற்பது மற்றும் மாணவர் பலத்தை அதிகரித்தல்; திட்ட நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்க தேவைப்பட்டால் நிதி திரட்டுதல்; மற்றும் CRTP இன் கல்வி கட்டமைப்பை தொடர்ந்து மேம்படுத்தும் செயல்பாடுகளை பகுப்பாய்வு செய்து செயல்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கிய செயல்பாடுகளைச் செய்யும்.

## குறிக்கோள்

மாணவர்களுக்கு பாதுகாப்பான மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட சூழலில் தரமான கல்வியை வழங்குதல், சிறந்த பாடத்திட்டத்தைக் கடைப்பிடித்து அவர்கள் தமிழில் படிக்க, எழுத, பேச பழகுவதை உறுதி செய்தல், மாணவர்களை திறமையான பேச்சாளர்கள் மற்றும் இலக்கிய தமிழில் தேர்ந்தெடுத்தோராக உருவாக்குதல், மேலும் தமிழ்ப் மொழியின் எதிர்கால வழிகாட்டிகள் மற்றும் அதைப் பரப்பும் *Torchbearers*-ஆக மாற்றுதல்.

## கொள்கை

தமிழ்ப் மொழிக் கல்வியில் முன்னணி வழங்குநராகத் திகழ்தல், மேலும் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் தமிழ் பேசும் சமூகத்திற்குத் தமிழ்ப் பண்பாட்டு வளமையை **பாதுகாத்தல், வளர்த்தல், மற்றும் நிலைநாட்டுதல்** என்பவற்றிற்குத் தளமாக செயல்படுதல்.



# 2021-2022

# ஆண்டு விழா



# <u>நிர்வாகக் குழு</u>

**<u>நிர்வாக சபை குழு</u>**

அன்பரசு சந்திரன் | பாலாஜி சண்முகம்

**<u>தொழில்நுட்ப குழு</u>**

இளங்கோ தண்டபாணி | விஜய் இளங்கோவன்

வெண்ணிலா வேல்முருகன்

**<u>பெசிலிடேசன் குழு *(Facilitation)*</u>**

சத்தியசீலன் | வெங்கடராமன் ஜெயராமன்

செந்தில் கணபதி | வில்பிரட் ஆண்டனி

ஷாலினி பிரதீப் | ஃபெலிசியா ரோச்



# ஆசிரியர்கள் குழு

**முன் மழலை**

பிரியதர்ஷினி பாலகிருஷ்ணன்

செல்வநந்தினி சுப்பிரமணியம்

**மழலை**

அருணா தேவி

மஞ்சுஸ்ரீ முத்துகணேசன்

அனிதா பாண்டியன்

**நிலை-1**

ஜென்கின்ஸ் பெனி வில்ஃப்ரெட்

ஜெயஸ்ரீ பாலாஜி

பிரவீன் நடராஜன்

**நிலை-2**

திப்மலா

கண்மணி வீரசிங்கம்

மோகனப்ரியா மதிவாணன்

மேனகா ஈஸ்வரமூர்த்தி

நந்தினி ராஜபாண்டியன்

**நிலை-3**

பிருந்தா ராஜசேனாதிபதி

**நிலை-4**

கீர்த்திகா தேவி

ரமேஷ் முத்தையா

ராஜலட்சுமி ராஜேந்திரன்

சதீஷ் குமார் ராஜேந்திரன்

# ஆசிரியர்கள் குழு

**நிலை-5**

அன்புராஜ் ரங்கையன்

அர்ச்சனா வெங்கடேஷ்

கார்த்திகாயினி சுப்பிரமணியன்

ஜேம்ஸ் சாம்ராஜ்

கார்த்திக் ராஜா

ஷோபனா கண்ணன்

கோமதி ஆனந்தன்

உமா மகேஸ்வரி சுயம்பு

**நிலை-6**

நவீன் மெய்யழகன்

சுரேஷ் கண்ணன்

**நிலை-7**

சசிமேகலா

**இருமொழி**

வாசுகி செந்தில்

# 2022 – 2023

# ஆண்டு விழா



# 2024 – 2025 கல்வியாண்டில் மாணவர்களின் சாதனைகள்

**ஆதர்ஷனா தங்கமராஜதுரை**

*நிலை: மழலை*

*துறை: கலை*

*அ.த.க மெய்நிகர் ஆண்டு விழா 2024 இல் நடைபெற்ற மாறுவேடப் போட்டியில் நான்காம் இடம் பெற்றார்.*





**தர்ஷிக் சதீஷ் குமார்**

*நிலை: மழலை*

*துறை: படிப்பு*

*ITC சர்வதேச தமிழ் கண்காட்சி நடத்திய 2025 திருக்குறள் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் நிலை 1 பிரிவில், மூன்றாம் இடத்தில் வெற்றி பெற்றார்.*

**ஸ்ரீஷா ராஜராஜன்**

*நிலை: 1*

*துறை: கலை*

*விலாசினி பிரிஜ் அகாடமி நடத்திய முன் மழலை பிரிவில் கர்நாடக இசை குரலில் சிறந்தவராக தேர்ச்சி பெற்றார்.*



# 2024 – 2025 கல்வியாண்டில் மாணவர்களின் சாதனைகள்

**ஆதவ் முத்துக்குமார்**

*நிலை: 2*

*துறை: விளையாட்டு*

*AYSO நடத்தும் United Club 9U program – கால்பந்து (ID64) போட்டியில் சிறந்த வீரராக தேர்வு செய்ய பெற்றார்.*






**தன்விகா பால சிங்கம்**

*நிலை: 2*

*துறை: விளையாட்டு*

*கராத்தே போட்டியில் blue & white stripe belt பெற்றார்*

**தன்விகா பால சிங்கம்**

*நிலை: 2*

*துறை: விளையாட்டு*

*Amana Soccer Slam 2024 போட்டியில் 8U பிரிவில் மூன்றாம் இடத்தில் வெற்றி பெற்றார்*



# 2024 – 2025 கல்வியாண்டில் மாணவர்களின் சாதனைகள்

**ஜாஷ்வா ஜேம்ஸ்**

*நிலை: 3*

*துறை: விளையாட்டு*

*AYSO கால்பந்து போட்டியில் இரண்டாவது இடத்தில் வெற்றி பெற்றார்*






**தக்ஷினேஷ் பால சிங்கம்**

*நிலை: 3*

*துறை: விளையாட்டு*

*மரியன் மியூசிக் அகாடமி பியானோ இசை நிகழ்ச்சியில் பங்கு பெற்றார்.*

**பரிக்ஷித் துரைராஜ்**

*நிலை: 4*

*துறை: விளையாட்டு*

- *IOWA குளிர்கால விளையாட்டுகள் தற்காப்பு கலை போட்டியில் 2 தங்கம் பதக்கம் வென்றார்.*
- *3 மாநிலங்களில் (IA, MN, WI) தற்காப்புக் கலைப் போட்டியில் 1 தங்கம், 1 வெள்ளி, 1 வெண்கலம் வென்றார்.*





# <u>*2024 – 2025 கல்வியாண்டில் மாணவர்களின் சாதனைகள்*</u>



**அதிதி முத்துக்குமார்**

*நிலை: 5*

*துறை: விளையாட்டு*

*Gymnastics State Meet Bronze level வயது 11 பிரிவில் முதலிடம் வென்றார்*

**கீர்த்தனா ராம்குமார்**

*நிலை: 5*

*துறை: விளையாட்டு*

*Gymnastics State Meet Bronze level வயது 10 பிரிவில் இரண்டாவது இடம் வென்றார்*












**தனிஷா புவியரசன்** *நிலை: 5*

*துறை: விளையாட்டு & படிப்பு*

- *AYSO 1112 CR கால்பந்து போட்டியில் 2024 12U பிரிவு நேர்மை மனப்பான்மை - முதல் பரிசு*
- *பெண்கள் பிரிவு - முதல் பரிசு.*
- *AYSO 1103 டிஃபின் கால்பந்து போட்டி 2024 12U பிரிவு - முதல் பரிசு*
- *ஜூனியர் கிரிக்கெட் லீக் போட்டி 2024 சிறந்த இம்பாக்ட் வீரர்.*
- *ஹேசல் பாயின்ட் இடைநிலைப் பள்ளி சிறந்த மாணவர் – அக்டோபர் மாதம் 2024*

# *2024 – 2025 கல்வியாண்டில் மாணவர்களின் சாதனைகள்*



**நேஹன்ராஜ் ரமேஷ்**

*நிலை: 6*

*துறை: விளையாட்டு*

*2024 ஆண்டு அயோவா மாநிலத்திலிருந்து முதன்மை போட்டியாளராக பார்பர் தேசிய சதுரங்கம் போட்டியில் கலந்து கொண்டார்.*

**செல்வி வன்ஷிகா விஸ்வநாதன்**

*நிலை: 6*

*துறை: கலை*

*Iowa Opus Honor Choir 2024 நிகழ்வுக்காக, Iowa மாநிலம் முழுவதிலும், 15 விழுக்காடு மாணவர்கள் மட்டுமே நவம்பர் 2024 வருட நிகழ்வில் பங்கேற்கும் பெருமை பெற்றார்கள்.*



# 2023-2024

# ஆண்டு விழா



# ஆசிரியர் விருது

தமிழ் கல்வி மற்றும் பண்பாட்டினை கற்பிக்கும் சேவையை பாராட்டி **ஜேம்ஸ் சாம்ராஜ்** மற்றும் **ஷோபனா கண்ணன்** அவர்களுக்கு **அ.த.க.**வின் *2024-2025* ஆம் ஆண்டு **நெடுநாள் ஆசிரியர் விருது** வழங்கி பெருமைப்படுகிறோம்.



**ஜேம்ஸ் சாம்ராஜ்**



**ஷோபனா கண்ணன்**



# ஆசிரியர் விருது

*2023-2024*





மாரிமுத்து சித்திரவேல்

வெண்ணிலா வேல்முருகன்

*2022-2023*

*2021-2022*





சுரேஷ் கண்ணன்

பாலாஜி சண்முகம்

தமிழ் கற்பிப்பதன் மூலம் சேவை செய்வதில் அற்புதமான பங்களிப்பை வழங்கியதற்கு உங்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறோம். ஒவ்வொரு ஆண்டும் உங்கள் தொடர்ச்சியான பங்கேற்பை மற்றும் சேவையை நாங்கள் ஊக்குவிப்போம்.